 ISSN: 2454-3993

# திருக்குறள் சுட்டும் வாழ்வியல் நெறிகள்

***திருமதி. செ. செல்வி***
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ் உயராய்வுத் துறை*
*தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி*
*தருமபுரம்.*

***முனைவர் எஸ். உமாமகேஸ்வரி***
*உதவிப் பேராசிரியர் மற்றும் நெறியாளர்*
*தமிழ் உயராய்வு மையம்*
*தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி*
*தருமபுரம்,*

மனிதன் அறச்சிந்தனை உடையவன். அறத்தை அகவாழ்விலும், புறவாழ்விலும் கடைப்பிடித்ததால் அவனது வாழ்வு செம்மை அடைந்தது. இதனால் இலக்கியவாதிகள் அறத்திற்கு உயர்வளித்தனர். மனிதனுடைய அறப்பண்புகள் எண்ணம், சொல, செயல் மூன்றிலும் வெளிப்படும். ஆயினும் காலச்சூழல்பண்பு மாற்றத்திற்கு வழிவகுத்துவிடும் என்பதால் இலக்கியங்கள் தொடர்ந்து அறத்தை வலியுறுத்தி வரலாயின. இதில் வள்ளுவத்தின் பங்கு சிறப்பானதாகும். திருக்குறள் எக்காலத்திற்கும், எல்லா மனிதர்க்கும் பொதுவான நியதியினைக் கூறியுள்ளதால் நிலைத்து வாழ்கிறது.

**எல்லாப் பொருளும் இதன்பால்உள இதன்பால்**
**இல்லா எப்பொருளைம் இல்லையால் சொல்லால்**
**பரந்தபா வால்என் பயன்? வள்ளுவனார்**
**சுரந்தபா வையத் துணை**

என எல்லாப் பொருள்களும் திருக்குறளில் அடங்கியிருக்கின்றது. திருக்குறளில் இல்லாதப் பொருள்கள் இவ்வுலகத்தில்லை என்றுறைக்கும் மதுரைத் தமிழ்மகனார் கூற்று நோக்கத்தக்கதாகும். இத்தகு சிறப்புடைய திருக்குறளில் வாழ்வியல் சார்ந்த நெறிகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

**கடவுள் நம்பிக்கை**

கடவுள் பற்றிய சிந்தனை என்பது காலங்காலமாக மனிதனுக்கு போதிக்கப்பட்ட ஒன்றாக காணப்படுகிறது. மனிதனைச் செம்மைப் படுத்துவதற்காகவும் மேன்மைப் படுத்துவதற்காகவும் வழிப்பாட்டு முறைகளில் மனித மனம் ஈடுபடுகின்றது. வள்ளுவரும் கடவுள் பற்றிய சிந்தனைகளை தம்குறட்பாக்களில் விதைத்துள்ளார். இவற்றுள் எந்த இறைவனையும் குறிப்பிடாமல் பொதுவான இறையின் இயல்புகளை எடுத்துகாட்டுகின்றார். அன்றாட வாழ்வில் மனிதர்களுக்கு துன்பங்களும், கஷ்டங்களும், கவலைகளும் இருக்கும். இந்த கவலைகள் எல்லாம் நீங்கி வாழ்வதற்கு இறைவன் மீது நம்பிக்கை வேண்டும் என்பதை,

**வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல" (குறள்:4)**

என்று குறிப்பிடுகின்றார்.

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எவ்விடத்திலும் துன்பமில்லை அதுபோல தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு துன்பங்கள் நீங்கும் என்பதை,

**தனக்குவமை இல்லாதான்தாள் சேரந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது**

என்று குறிப்பிடுகின்றார். மேலும் இறைவனைத் தொழுகின்றவர்கள் இப்பூமியில் நீண்ட நாட்கள் வாழலாம் என்ற உண்மையை,

**மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்**

எனவும் இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும் என்பதை,

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்**

என்னும் குறட்பாக்களால் அறியமுடிகின்றது.

**உயிர்க் கொல்லாமை**

மனித இனத்தின் சிறப்பு, மற்ற உயிரினங்களைப் பேணுவதில் இருக்கிறது. ஆனால் சிலர் கடவுளின் பெயராலும், தம் ஊனைப் பெருக்கும் விருப்பத்தாலும் உயிரினங்களைக் கொலை செய்கின்றனர். திருவள்ளுவர் புலால்மறுத்தல் (26) கொல்லாமை (33) எனும் இரு அதிகாரங்களை அமைத்து அக்கொடுமையினைக் களையமுற்பட்டார். எளிய உயிர்களைக் காணும் பொழுது அவற்றின் மீது இரக்கம் கொள்பவன் சிறந்தவனாவான். வள்ளுவர், ‘அருள் யாதெனில் கொல்லாமை’ (254) என்கின்றார். தன் உடலைப் பலப்படுத்த பிற உயிரைக் கொன்று தின்பவனிடம் அருளுணர்ச்சியை எதிர்பார்க்க இயலாது (251) என்கிறார். இவ்வுலகில் புலால் உண்பவர் இருப்பதால்தான் அவர்கட்காகப் புலாலை விற்கச்சிலர் உயிர்க்கொலைப் புரிகிறார்கள். புலால் தின்பவர் இல்லைஎனில் விற்பதன் பொருட்டு உயிர்க்கொலை செய்பவர்களும் இருக்கமாட்டார்கள். (256) எனவும் கூறுகிறார்.

உலகில் இயற்றப்படும் அறங்கள் பலவாகும் அவற்றுள் கொல்லாமையாகிய அறமே முதன்மையானது. இதனைச் திருவள்ளுவர்,

**அறவினை யாதெனில் கொல்லாமை’ (321)**
**ஒன்றாக நல்லது கொல்லாமை’ (323)**
**கொல்லா நலத்தது நோன்மை’ (984)**

எனக்குறிப்பிடுகின்றார். எந்த ஓர் உயிரையும் கொலை செய்யாது, புலால் உண்ணாது வாழ்பவர்களை இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்பதை,

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும் (260)**

என்றவாறு உயிர்க்கொல்லாமை நிலையை வள்ளுவர் உணர்த்துகின்றார்.

**ஒழுக்க நெறி**

வள்ளுவர் மனிதனின் காலத்தைச் சார்ந்த ஒழுக்க நெறிகளை சிறப்பாக வெளிப்படுத்துகின்றார். பிறன்மனை நயவாதிருத்தல், பிறர் கூறும் இன்னாசொற்களைப் பொறுத்தல், மற்றவர்களிடம் இன்சொற்களையே பேசுதல், பிறரது உடைமையை, உயர்நிலையைக் கண்டு அழுக்காறின்றிருத்தல், பிறர்பொருளைக் கவர விரும்பாமை, முன்னுக்குப் பின் மாறுபாடானச் சொற்களைச் சொல்லாதிருத்தல், தீயினும் கொடிய தன்மை வாய்ந்த தீவினைக்கு அஞ்சிவாழ்தல், இல்லாதார் அவசியத்தை தீர்த்து அறம் புரிதல் இவ்வாறு ஒழுக்க நெறியோடு வாழ்ந்தால் இல்வாழ்வானும் அந்தமில் அழிவிலின்ப வீட்டை எளிதிற் பெறக் கூடும் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

மக்கள் அனைவரும் ஒழுக்கத்தோடு வாழவேண்டும். ஒழுக்கத்தோடு வாழ்ந்தால் அவர்கள் மேன்மை அடைவார்கள் அதனால்தான் ஒழுக்கம் உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படுகிறது என்பதை,

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்” (குறள்: 131)**

என்ற குறட்பாவில் வெளிப்படுத்துகின்றார். நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்விற்குத் துணையாகும். தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைத்தான் கொடுக்கும் என்பதை,

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும் (குறள்: 138)**

என அறிவுறுத்துகின்றார். ஒழுக்கநெறிகள் காலம், இடம், குலம் முதலியவற்றிற்கேற்ப மாறிடும் சூழல் உருவாகும்போது, எந்நிலையிலும் மாறாது இருக்கும் நெறியினைப் பின்பற்ற நேரிடும்.

பிறர் பொருளைக் கவர நினைக்காது தன் நெஞ்சைக் காத்துக்கொள்ள வேண்டும். அப்படி வாழ்ந்தால்தான் பிறரால் இகழப்படாமல் வாழலாம்.

**எள்ளாமை வேண்டுவான் எண்பான் எனைத்தொன்றும்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு (குறள்: 281)**

பிறருடைய பொருளை அபகரிக்கக்கூடாது என்று வலியுறுத்துகிறார். பிறருடைய பொருளை யாரும் அறியாத வகையில் வஞ்சித்துக் கொள்வோம் என்று மனதில் நினைப்பதே குற்றம் என்கிறார். ஒருவன் தன்மனதில் கோபத்தை நினைக்காது இருப்பானேயானால் அவன் நினைத்த நன்மைகள் எல்லாம் அவனை வந்து சேரும் என்கிறார். நாம் நினைப்பதெல்லாம் நமக்கு கிடைக்க வேண்டும் என்றால் சினத்தைக் கைவிட வேண்டும்.

**உள்ளியது எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்**
**உள்ளான் வெகுளி எனின் (குறள்: 309)**

மேலும், தன் உயிரைக் காத்துக்கொள்ளவேண்டும் என்றால் கோபம் வராது காத்துக் கொள்ளவேண்டும். அப்படி காக்காவிட்டால் கோபம் தன்னையே அழித்துவிடும் என் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். உழைப்பை மறந்து பிறர் ஆக்கத்தில் அழுக்காறு கொண்டு தொல்லைகள் தந்து, தாமும் துயருறுவோரை எங்கும் எந்நிலையிலும் முடிகின்றது. பூசல்களையும் போர்களையும் எண்ணிப்பார்த்து அகத்தைத் தூய்மைப்படுத்த முற்பட வேண்டும்.

**ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து**
**அழுக்காறு இலாத இயல்பு (குறள்: 161)**

அழுக்காறு எனும் களையை அகற்றினால்தான் உலகில் ஒழுக்கம் என்ற பயிர்வளரும். ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்குரிய ஒழுக்க நெறியாகக் கொண்டு போற்றவேண்டும். பேராசையில்லாமலும் (குறள்: 368) எந்த ஒரு காலத்திலும் யாருக்கும் மனதளவில் கூட துன்பங்கள் செய்யாமலும் (குறள்: 317, 319) இருத்தல் வேண்டும் என்பது வள்ளுவரின் வாழ்வியல் ஒழுக்கமாக அமைகின்றது. பிறர் தமக்குச் செய்கின்ற தீங்கைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம்போல, தம்மை இகழ்ந்து பேசுபவர்களையும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பதை,

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை (குறள்: 151)**

என்ற குறட்பாவின் மூலம் குறிப்பிடுகின்றார்.

இத்தகு ஒழுக்க நெறியே தனிமனித உயர்வுக்கும் சமூக உயர்வுக்கும் வழிகாட்டும் என்பது வள்ளுவரின் நிலைப்பாடு ஆகும்.

**இல்லற நெறி**

வாழ்வின் கூறுகளை வள்ளுவர் இரண்டாகப் பாகுபாடு செய்கிறார். அவ்விரு கூறுகளாகத் திகழ்வது இல்வாழ்க்கையும் துறவு வாழ்க்கையுமாகும். இல்வாழ்க்கையை வாழ்வதற்குத் துணைநலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல் போன்ற அதிகாரங்களும் இன்பத்துப்பாலில் வரும் இருபத்தைந்து அதிகாரங்களும் இல்லறத்தின் மேன்மையைப் புலப்படுத்துகிறது. அறநெறியின் நின்று ஒருவன் இல்லறத்தை நடத்துவானாயின் அவன் பிற நெறிகளில் சென்று பெறக்கூடிய பலன் யாதொன்றும் இல்லை. மேலும் கணவன் மனைவியால் இல்லறத்தில் இணைந்து இன்புற்று வாழ்வானாயின் அவன் வானுலகில் வாழும் தேவருள் ஒருவனாய் மதிக்கப்படுவான்.

**காலத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுள்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

என்ற குறளின் மூலம் அறியலாம். இல்லறநெறியும் இதன் அடித்தளமான கூட்டுக்குடும்பமும், விருந்தோம்லும் இல்லறத்தின் பெருமையினை சிறப்பிக்கும் என்பது வள்ளுவரின் எண்ணமாகும்.

**முடிவுரை**

திருக்குறள் சங்க மருவிய காலத்து எழுந்த ஒப்பற்ற நீதிஇலக்கியம். திருக்குறள் காலத்து நிலவிய நாகரிகப்பண்பாட்டு வாழ்வியல் முறைகள் சிறப்புற்று விளங்கியமை அறியமுடிகின்றது. மனிதர;கள் வாழ்வியல் கூற்றும், சமூகம் சார்ந்து இருப்பதற்கான ஒப்பற்ற நூலாக வள்ளுவம் விளங்குவதை அறிய முடிகிறது.

**சான்று நூல்கள்**

1. க.கோ வேங்கடராமன், இலக்கிய வரலாறு, ப.231.
2. சி.சுந்தரமூர்த்தி, வான்மறை வள்ளுவன், ப.75.
3. திருக்குறள் அறன் வலியுறுத்தல், 35.
4. கலைக் களஞ்சியம் தொகுதி - 1 ப.259.
5. தொல் பொருள், செய்யுளியல் 1363.
6. கு.திருநாவுக்கரசு, திருக்குறளும் நீதி இலக்கியமும், ப.29.
7. தா.ஏ. ஞானமூர்த்தி இலக்கியத்திறனாய்வு, ப.15.
8. ஐங்குறுநூறு